மதிய உணவுத் திட்டம்

950-ஐ கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூட பகல் உணவுத் திட்டத்தில் சாப்பாட்டுக்குப் பதில் ரொட்டி கொடுப்பதாக அரசாங்கம் உத்திரவிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்வி எழவில்லை.

* 950-ஜே கேள்வி—**திரு. இராம அரங்கண்ணல் (திரு. முனு ஆதி—சார்பாக) :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளி மதிய உணவுத் திட்டத்தின் கீழ், 1960–61, 1961–62 ஆண்டுகளில் CARE உணவுப் பொருள்களுக்காக மாநில அரசாங்கம் செலவழித்துள்ள தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "கேர்" உதவி 1961–62-ல் இருந்துதான் கிடைக்கிறது. "கேர்" உணவுப் பொருட்கள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் துறைமுகத்திலிருந்து அப்புறப்படுத்துதல், போக்குவரத்து, கிடங்கு முதலியவைகளுக்கான கட்டணங்களுக்காகவும் "கேர்" அலுவலகத்தின் செலவுக்காகவும் 15,76,400 ரூபாய் 1961–62-ல் செலவழிக்கப்பட்டது.

M.B.B.S. Degree (Madurai Medical College)

* 950-K. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Indian Medical Council has not recognised the M.B.B.S. Degree obtained by students who studied in the Madurai Medical College?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : Yes, Sir.

திரு. வை. சங்கரன் : இந்திய மருத்துவக் கழகமே அங்கீகரிக்காததொரு காரணத்தினால் இங்கிலாந்து போன்ற அயல் நாடுகளுக்கு மேல் படிப்பிற்கு இங்கிருந்து எம்.பி.பி.எஸ். பாஸ் செய்து செல்கிறவர்கள் அங்கு பார்ட் டைம் ஜாபில் அமர, பிரிட்டிஷ் மெடிக்கல் கவுன்சிலிலும், இந்தியன் மெடிக்கல் கௌன்ஸிலிலும் அங்கீகரிக்காததால், மேல் படிப்பிற்கு செல்கிறவர்கள் பார்ட் டைம் ஜாப் எடுத்துக்கொள்ள முடியாததால் அவர்கள் படிப்பு பாதிக்கும் நிலையிருக்கிறது என்ற குறைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இது சம்பந்தமாக இந்திய மருத்துவக் கழகம் அங்கிகாரம் அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டிஸம்பர் 15, 16-ம் தேதிகளில் இந்தியன் மெடிக்கல் கவுன்சில் மதுரை மெடிக்கல் காலேஜை ரிகக்னைஸ் செய்ய இன்ஸ்பெக்ஷனுக்கு வருகிறார்கள். ஸ்டாப் பொஸிஷன் சரியாக இல்லாததால் இவ்வளவு ஆண்டுகளாக ரிகக்னைஸ் செய்ய முடியாமல் இருந்தது. இந்த ஆண்டு ரிகக்னிஷன் வந்து விடும்.

Roads (Salem district)

* 950-L. *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of roads other than Panchayat Union Council roads taken up for formation in the Krishnagiri Division in Salem district in the year 1961–62;